நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம்,
எம்.ஆர்.சி. நகர். சென்னை–28.

ந.க.எண். 18342/2019/டிபி2 நாள். 07.09.2019.

## சுற்றறிக்கை

பொருள் மாநகராட்சி மற்றும் நகராட்சி சாலைகளில் அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ள ஆட்டோ ஸ்டாண்டுகள் அப்புறப்படுத்துவது – வாடகை கார்கள், ஆட்டோக்கள், ஆம்னி பேருந்துகள் மற்றும் வேன்கள் நிறுத்துமிடத்திற்கான இடம் ஒதுக்குவது – அனுமதி வழங்குவது – தொடர்பாக.

பார்வை: 2003–2005 – 30–வது மதிப்பீட்டுக்கு குழு பரிந்துரை எண். 439 மற்றும் 440.

*********

பார்வையில் காணும் 2003–2005 ஆண்டின் 30–வது மதிப்பீட்டுக்கு குழு பரிந்துரை எண். 439–ல் மாநகராட்சி மற்றும் நகராட்சி சாலைகளில் அங்கீகாரம் பெறாத ஆட்டோ ஸ்டாண்டுகள் அப்புறப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், மாநகராட்சி மற்றும் நகராட்சி ஒதுக்குகின்ற இடத்தில்தான் ஆட்டோக்கள் நிறுத்தப்படவேண்டும் என்பது குறித்த அறிவுரைகள் அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கும் உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்றும்,

பரிந்துரை எண். 440–ல் மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் வாடகைக் கார்கள் நிறுத்தும் இடம், ஆட்டோக்கள் நிறுத்தும் இடம், ஆம்னி பேருந்துகள் மற்றும் வேன்கள் நிறுத்தும் இடம் ஆகியவை குறித்து துறை போக்குவரத்து துறையுடன் கலந்து ஆலோசித்து, பொதுமக்கள் பாதிக்கப்படாத வகையில் அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, அனைத்து நகராட்சி மற்றும் மாநகராட்சி ஆணையர்கள் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 மற்றும் அந்தந்த மாநகராட்சிகள் சட்ட விதிகளின்படியும் மாநகராட்சி மற்றும் நகராட்சி சாலைகளில் உள்ள அங்கீகாரம் பெறாத ஆட்டோ ஸ்டாண்டுகள் அப்புறப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும், மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் ஆட்சேபகரமான பகுதிகளில் உள்ள அனுமதியற்ற ஆட்டோ நிறுத்தங்கள், வாடகை கார் நிறுத்தங்கள் போன்றவற்றை உடனடியாக அகற்ற வேண்டும்.

மேலும், மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் வாடகைக் கார்கள் நிறுத்த தேவையான இடம், ஆட்டோக்கள் நிறுத்த தேவையான இடம், ஆம்னி பேருந்துகள் மற்றும் வேன்கள் நிறுத்தி தேவையான இடம் ஆகியவற்றை பட்டியலிட்டு போக்குவரத்து துறை / காவல்துறை / போக்குவரத்து காவல் துறை / வருவாய் துறை ஆகிய துறைகளுடன் கலந்து ஆலோசித்தும் தேவைப்படும் நேர்வுகளில் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான சாலை பாதுகாப்பு குழு கூட்டத்தின் முடிவைப் பெற்றும், தகுதியான இடங்களை தேர்வு செய்து, பொதுமக்கள் பாதிக்கப்படாத வகையில், சட்ட விதிகளில் குறியிட்டவாறு விதிகள் ஏற்படுத்தியும், சட்ட

விதிகளின்படி தேவைப்படும் நேர்வுகளில் உரிய கட்டணம் நிர்ணயம் செய்தும் அனுமதி வழங்கி முறைப்படுத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சி ஆணையர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர்கள் இப்பொருள் குறித்தான ஆலோசனை கூட்டத்தினை 15 தினங்களுக்குள் நடத்தி அனைத்து நகராட்சி ஆணையர்களுக்கும் அறிவுரை வழங்கிட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தங்கள் மண்டலத்திற்குட்பட்ட நகராட்சிகள் எடுத்த நடவடிக்கையின் விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு 30.09.2019–க்குள் அறிக்கையாக அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாநகராட்சி ஆணையர்கள் மேற்குறிப்பிட்டவாறு நடவடிக்கை எடுத்து அதன் விவரத்தினை 30.09.2019–க்குள் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நகராட்சி நிர்வாக ஆணையர்

பெறுநர்–

1. அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.

2. அனைத்து மாநகராட்சி / நகராட்சி ஆணையர்கள்.



e:\tp section _19.09.2018\tp2\30.08.19_ circular parking tp2.doc